ற்றம்பலம்.



வேலுமயிலுந்துணை.

திருப்போரூர் முருகக்கடவுள்

# கீர்த்தன மஞ்சரியும்,

## சைவசமயாசாரியர்கள்

## தேவாரத் திரட்டும்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை

* சிவானுபூதிச் செல்வத் திருத்தொண்ட சபையார்

கேட்டுக்கொண்டவண்ணம்

அத்வைத பக்த லீலாமிர்த சபையின் காரியதரிசி

களத்தூர் - முனிசாமிப்பிள்ளை அவர்களால்

இயற்றவுந் தொகுக்கவும் பெற்றது.

* ஷை சபையின் அங்கத்தினராகிய

...கப்புராஜு பிள்ளையின் நன்முயற்சியால்

...ாசிமீ 3உ (14—2—13) கார்த்திகை

...ட்சத்திரத்தின்போது

... சந்நிதானத்தில் அரங்கேற்றி

...பிரயோகிக்கப்பட்டது.

Q26:38·2112JR
N13.
186137



உ

வேலுமயிலுந் துணை.

திருப்போரூர் முருகக்கடவுள்

# கீர்த்தன மஞ்சரி.

வேம்படி விநாயகர் தோத்திரம்.

நேரிசை வெண்பா.

போரூர் முருகன் பொலங்கழற்குக் கீர்த்தனமாஞ்
சீரூரு மஞ்சரியைச் செப்புவாம்—ஏரூரும்
நிம்ப நிழலு நினைப்பா ரகமுமிருக்
கும்புனித யானையருட் கொண்டு.

கமாசு; பல்லவி. சதுரசிரஜாதி திரிபுடை.

ஆறுமாமுகனே - போரூர்வாழ் குகனே

அநுபல்லவி.

வீறு சுராதிகுல - காலனே
வேத கீத போத - மூலனே (ஆறு)

சரணம்.

சரவண மிசைவளர் தகையுறு தேவா
சதுமுகன் சிறைபெறச் செயுமருள் பாவா
சதுரோவா ஹரமூவா வரந்தாவா காவா (ஆறு)

பிலஹரி; பல்லவி. சதுரசிரஜாதி ரூபகம்.

தண்ணருள் செயாய் - தவ, திருமுருகையா

அநுபல்லவி.

சதமென சுரர்முனி வரர்களும்
பதந்தொழுபொற் சமருறைபவா (தண்)

தாது மது செறிகடம்பு
போது திகழ் தருமார்பனே (தண்)

சரணம்.

அன்னமாடு மகன்ற தடமுஞ் செழியபணையு
நன்னர் ஞான விரதபரரும் பரவுபுடையும்
ஐயா நினை புகழ்ந்து துதி செய்யா தவமதனினித
நையா தொருவிழி யருளொடு (தண்)

அரிகாம்போதி; பல்லவி. சதுரசிரஜதி திரிபுடை.

மயிலேறிய வொயில் வீரா

அநு பல்லவி.

தேவானையா - ரொருசா ரொருபால்
திவ்யவள்ளி திகழ (மயி)

சரணம்.

சுடர் வேலொரு கர மின்னவும்
தொழு கோழியின் கோடி யோங்கவும்
அடியார் கூடியே துதி பாடுறவும்
அறியே னெனைக்காக்கவும் (மயி)

(சங்கராபரஹணம்; பல்லவி. சதுரசிரஜாதி திரிபுடை)

முருகார்கடம்பு மாலைமார்பனே
முனைவேல் குறவர் மகள் சார்பனே.

அநுபல்லவி.

186131
முருகா செங்கண்மால் மருகா சேயன்மே
லொருகா லேனுமன் புருகா யுருகாய் (முரு)

சரணம்.

ஐவகைப் பூதத்தி லாயபொய்ச் சகத்தில்
அவல சகத்தி லழிவேனகத்தில்
மெய்வகை புனைபைச் செய்வகையீ தென்மை
யுய்வகை யிச்சனமத் தொழிப்பாயே தன்மை (முரு)

திருச்சிற்றம்பலம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

உ

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியர்கள்

# தேவாரத்திரட்டு.

## திருவலிவலம்.

(நாட்டை. சதுரசிரஜாதி திரிபுடை.)

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

---

## திருப்பிரமபுரம்.

(நாட்டை; திரிசிரஜாதி திரிபுடை.)

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வ
னேடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மா னிவனன்றே.

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம் பவைபூண்டு
வற்றலோடு கலனாப்பலி தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல் கேட்ட லுடையார் பெரியார்கழல் கையாற் றொழுதேத்தப்
பெற்றமூர்ந்த பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கை யலர்மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மானிவன்றன்னை
யொருநெறிய மனம்வைத் துணர்ஞான சம்பந்த னுரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே.

1231
284.0
Q26:85:2112JR
N13

## திருநள்ளாறு.

(தோடி! சதுரசிரஜாதி ரூபகம்.)

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற் றண்ணல் பரமேட்டி
யாகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

தோடுடைய காதுடையன் றோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடைய
னேடுடைய மேலுலகோ டேழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே.

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம்பந்தனல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்து மிவைவல்லா
ருண்புநீங்கி வானவரோ டுலகி லுறைவாரே.

---

## கோயில்.

(காம்போதி; திரிசிரஜாதி ஏகதாளம்.)

ஆடினாய்நறு நெய்யொடு பாறயி ரந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினாயிட மாநறுங் கொன்றை நயந்தவனே [டிங்கள்
பாடினாய்மறை யோடுபல் கீதமும் பல்சடைப் பனிகால்கதிர் வெண்
சூடினா யருளாய் சுருங்க வெந்தொல் வினையே.

கொட்டமே கமழுங் குழலாளொடு கூடினா யெருதேறினாய் நுதல்
பட்டமே புனைவாயிசை பாடுவ பாரிடமா [பலம்
நட்டமே நவில்வாய் மறையோர்தில்லை நல்லவர் பிரியாத சிற்றம்ப
இட்டமா யுறைவாயிவை மேவிய தென்னை கொலோ.

நாறு பூம்பொழி லண்ணியகா ழியு ளான்மறைவல்லஞானசம்பந்தன்
ஊறுமின் றமிழா லுயர்ந்தா ருறைதில்லை தன்னுள் [திவை
ஏறுதொல் புகழேந்து சிற்றம்பலத் தீசனையிசையாற் சொன்னபத்
கூறுமாறு வல்லாருயர்ந் தாரொடுங் கூடுவரே.

(இராகம்—சஹானா.)

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதீ மிக்க
உருவேயென் னுறவேயென் னூனே யூனி
னுள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோ யடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையு மமர ரேறே.

---

## திருவதிகைவீரட்டானம்.

186137

(சஹானா; சதுரசிரஜாதி ரூபகம்.)

கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நா னறியே
னேற்றாயடிக்கே யிரவும்பகலும் பிரியாது வணங்குவனெப் பொழுதுந்
தோற்றாதென் வயிற்றினகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
வாற்றே னடியே னதிகைக்கெடில வீரட்டானத் துறையம்மானே.

நெஞ்சம்முமக்கே யிடமாக வைத்தே னினையா தொருபோது மிருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பதுகண் டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை நணுகாமற் றுரந்து கரந்துமிட
ரஞ்சேலு மென்னீ ரதிகைக்கெடில வீரட்டானத் துறை யம்மானே.

போர்த்தாயங்கோ ரானையி னீரிருதோல் புறங்கா டரங்காநட மாடவல்லா
யார்த்தா ரரக்கன்றனை மால்வரைக்கீ ழடர்த்திட்டருள் செய்தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்து மெழுந்தாலென் வேதனையான விலக்கியிடா
யார்த்தார் புனல்சூழதிகைக்கெடில வீரட்டானத்துறை யம்மானே.

---

## தனித்திருக் குறுந்தொகை.

(கேதாரகௌளம்; சதுரசிரஜாதி திரிபுடை.)

மாசில்வீணையு மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலு
மூசுவண்டறை பொய்கையும்போன்றதே
யீசனெந்தை யிணையடிநீழலே.

கடலைவாழ்வுகொண் டென்செய்தீர்நாணிலீர்
சுடலைசேர்வது சொற்பிரமாணமே
கடலினஞ்சமு துண்டவர்கைவிட்டால்
உடலினார்கிடந் தூர்முனிபண்டமே.

விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போன்
மறையநின்றுளன் மாமணிச்சோதியான்
உறவுகோனட் டுணர்வுகயிற்றினான்
முறுகவாங்கிக் கடையமுன்னிற்குமே.

---

## திருமறைக்காடு.

(சக்ரவாகம்; திரிசிரஜாதி திரிபுடை.)

பண்ணினேர்மொழி யாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ் செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக் காணக்கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள்செய்மினே.

ஈண்டுசெஞ்சடை யாகத்துளீசரோ
மூண்டகார்முகி லின்முறிகண்டரோ
வாண்டுகொண்ட நீரேயருள்செய்திடும்
நீண்டமாக்கத வின்வலிநீக்குமே.

அரக்கனைவிர லாலடர்த்திட்டநீ
ரிரக்கமொன்றிலீ ரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள் சூழ்மறைக்காடரோ
சரக்கவிக்கத வந்திறப்பிம்மினே.

---

(இ-ம். நாதநாமக்கிரியை.)

நினைத்தவர்க ணெஞ்சுளாய் வஞ்சக் கள்வா
நிறைமதியஞ் சடைவைத்தா யடையா தன்பால்
முனைத்தவர்கள் புரமூன்று மெரியச் செற்றாய்
முன்னானைத் தோல்போர்த்த முதல்வா வென்றுந்

கனைத்துவரு மெருதேறுங் காள கண்டா
கயிலாய மலையாகின் கழலே சேர்ந்தேன்
அனைத்துலகு மாள்வானே யானைக் காவா
வலகண்டங் கொண்டடியே னென்செய் கேனே.

---

## திருவெண்ணெய் நல்லூர்ப்பதிகம்.

(நாதநாமக்கிரியை; சதுரசிரஜாதி ரூபகம்)

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
வெத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னை
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளாயாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையாற்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையு
ளாரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே.

---

## திருப்பாச்சிலாச்சிராமம்.

செஞ்சுருட்டி; சதுரசிரஜாதி திரிபுடைதாளம்.)

வைத்தனன்றனக்கே தலையுமென்னாவும்நெஞ்சமும் வஞ்சமொன்றின்றி, யுய்த்தனன்றனக்கே திருவடிக்கடிமை யுரைத்தக்காலுவமனேயொக்கும், பைத்தபாம்பார்த்தோர்கோவணத்தோடுபாச்சிலாச்சிராமத்தெம்பரமர் பித்தரேயொத்தோர்நச்சிலராகிலிவரலாதில்லையோபிரானார்.

அன்னையேயென்னே னத்தனேயென்னே னடிகளேயமையுமென்றிருந்தேன், என்னையுமொருவ னுளனென் றுகருதியிறையிறைதிருவருள்காட்டாய், அன்னமாம்பொய்கைசூழ்தருபாச்சிலாச்சிராமத்துறையடிகள், பின்னையேயடியார்க் கருள்செய்வதாகிலிவரலாதில்லையோபிரானார்.

ஏசினவல்ல விகழ்ந்தனவல்ல வெம்பெரு மானென்றெப்போதும், பாயினபுகழான் பாச்சிலாச்சிராமத் தடிகளையடிதொழப்பன்னாள், வாயினாற்கூறிமனத்தினானினைவான்வளவயனாவலாரூரன், பேசினபேச்சைப் பொறுக்கிலராகி லிவரலாதில்லையோபிரானார்.

---

## திருவன்பார்த்தான் பனங்காட்டூர்

(எதுகுல காம்போதி — திரிசிரிஜாதி திரிபுடை தாளம்)

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
யடையிலன் புடையானை யாவர்க்கு மறிவொண்ணா
மடையில்வா ளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்
சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார் சார்பென்னே.

நெற்றிக்கண் ணுடையானை நீறேறுந் திருமேனிக்
குற்றமில் குணத்தானைக் கோணாதார் மனத்தானைப்
பற்றிப்பாம் பரையார்த்த படிறன்றன் பனங்காட்டூர்ப்
பெற்றொன்றே றும்பிரானைப் பேசாதார் பேச்சென்னே.

பாரூரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானைச்
சீரூருந் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த
வாரூரன் னடித்தொண்டன் னடியன்சொல் லடிநாய்சொ
லூரூர னுரைசெய்வா ருயர்வானத் துயர்வாரே

## வாழ்த்து.

காம்போதி — மிசிரஜாதி ஜம்பை.

திருநின்ற வேம்படிவி நாயகன்றாள் வாழி
செஞ்சடையின் மதிவைத்த சிவனடிகள் வாழி
கருநின்ற வுலகீன்ற கன்னிகழல் வாழி
கந்தன்றன் சேவடியும் வேலுமயில் வாழி
மருநின்ற குழறெய்வ யானைவள்ளி வாழி
மாண்புற்ற சமயாசா ரியர்நால்வர் வாழி
தெருணின்ற சிவானுபூதி திருத்தொண்டர் சபையுஞ்
செழித்தோங்க வளமார்ந்த ஜெகதலமும் வாழி.

திருச்சிற்றம்பலம்.